மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களும், இன்னும் அவரைச் சார்ந்தவர்களும் ஏற்கனவே இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். காந்தி மாளிகைக்கு மாற்ற நடவடிக்கைகள் விரைவாக எடுக்கும்படி, மாவட்ட அதிகாரிக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

8. அறிக்கைகள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த ஆண்டுக்கான ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகள் அவைக்கு அளிக்கப்படுகின்றன. முதலில், பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை திரு. பெ. மலைச்சாமி அளிக்கிறார்கள்.

(i) மின்சாரவாரியத்தின் 1962-63-ல் இருந்து 1964-65 வரையுள்ள கணக்குகள் குறித்து பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU P. MALAICHAMY : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Committee on Public Accounts on the Audit Reports on the Accounts of the Madras State Electricity Board for the years 1962–63 to 1964–65.

(ii) மீனளம் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் நான்காம் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை திரு. எஸ். இராமச்சந்திரன் அளிக்கிறார்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மதிப்பீட்டுக் குழுவின் மீனளம் பற்றிய 4-வது அறிக்கையை வைக்கிறேன்.

(iii) அரசினர் உறுதிமொழிக் குழுவின் இரண்டாம் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை திரு. கே. எஸ். கோதண்டராமய்யா அவர்கள் அளிப்பார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, on behalf of the Chairman of the Committee on Government Assurances, I present the Second Report of the Committee (Fourth Assembly) for the year 1967–68.

(iv) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை

THIRU R. N. RANGANATHAN : Hon. Speaker, Sir, on behalf of the Committee on Subordinate Legislation, I present the Second Report of the Committee (Fourth Assembly) for the year 1967–68.